**செய்தி வெளியீடு எண்: 232** **நாள்: 06.04.2018**

# <u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 5.4.2018 அன்று தலைமைச் செயலகத்தில், தகவல் தொழில்நுட்பவியல் துறை சார்பில் சென்னை – மெரினா கடற்கரையில் உள்ள உழைப்பாளர் சிலை, கோயம்புத்தூர் – காந்திபுரம் பேருந்து நிலையம், சேலம் – மத்திய பேருந்து நிலையம், திருச்சிராப்பள்ளி – மத்திய பேருந்து நிலையம் மற்றும் மதுரை – மாட்டுத்தாவணி எம்.ஜி.ஆர். பேருந்து நிலையம் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள அம்மா வைஃபை மண்டலங்களை துவக்கி வைத்தார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த 23.9.2016 அன்று வெளியிட்ட அறிக்கையில், தமிழகத்தில் உள்ள பெரிய பேருந்து நிலையங்கள், வணிக வளாகங்கள், பூங்காக்கள் போன்ற பொது இடங்களில், Wi-Fi என்னும் கம்பியில்லா இணைய வசதி கட்டணமில்லாமல் வழங்கப்படும் என்ற வாக்குறுதியை நடைமுறைப்படுத்தும் வகையில், முதற்கட்டமாக பெரிய பேருந்து நிலையங்கள், பூங்காக்கள் போன்ற 50 இடங்களில் 'அம்மா வைஃபை மண்டலம்' (Amma Wi-Fi Zone) ஏற்படுத்தப்படும் என்று அறிவித்திருந்தார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் வாயிலாக 8 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் 50 இடங்களில் அம்மா வைஃபை மண்டலங்கள் அமைக்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசால் 16.8.2017 அன்று அரசாணை வெளியிடப்பட்டது.

அதன்படி முதற்கட்டமாக, சென்னை – மெரினா கடற்கரையில் உள்ள உழைப்பாளர் சிலை, கோயம்புத்தூர் – காந்திபுரம் பேருந்து நிலையம், சேலம் – மத்திய பேருந்து நிலையம், திருச்சிராப்பள்ளி – மத்திய பேருந்து நிலையம் மற்றும் மதுரை – மாட்டுத்தாவணி எம்.ஜி.ஆர். பேருந்து நிலையம் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள அம்மா வைஃபை மண்டலங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

அம்மா வைஃபை மண்டலங்களில் நபர் ஒருவருக்கு, ஒரு நாளைக்கு 20 நிமிடங்கள் கம்பியில்லா இணைய சேவை வசதி இலவசமாக வழங்கப்படும். அதன் பின்னர், பயன்படுத்தப்படும் கம்பியில்லா இணைய சேவை வசதிக்கு மணிக்கு 10 ரூபாய் வீதம் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் டாக்டர் எம். மணிகண்டன், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., தகவல் தொழில்நுட்பவியல் துறை செயலாளர் டாக்டர் பி. சந்தர மோகன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**